**செய்தி வெளியீடு எண். 44/2018** **நாள் 05.09.2018**

சென்னைக் குடிநீர் வாரியம் , புழல் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து குடிநீர் கடத்தி செல்லும் 1200 மி.மீ விட்டமுள்ள தெற்கு பிரதான குழாயில் புழல் அம்பத்தூர் சாலையில் ஏற்பட்டுள்ள வால்வு கசிவை சரிசெய்யும் பொருட்டு, 07.09.2018 காலை 9.00 மணி முதல் 08.09.2018 காலை 9.00 மணி வரை ( 24 மணி நேரம்) பணிமேற்கொள்ள திட்டமிட்டடுள்ளது. மேற்கூறிய பணி நடைப்பெறும் நேரத்தில் மத்தியம் மற்றும் தெற்கு பிரதான குழாய் முலம் குடிநீர் வழங்க இயலாது. எனவே கொளத்தூர், திரு.வி.க. நகர், அகரம் , செம்பியம் (பகுதி) கொரட்டுர் ,பாடி ( பகுதி), அண்ணாநகர் (பகுதி), திருமங்கலம், அம்பத்தூர், மண்ணுர்பேட்டை, ஆவடி மற்றும் திருமுல்லைவாயல் ஆகிய பகுதிகளுக்கு போதுமான குடிநீர் கிடைக்க இயலாது.

பொது மக்கள் முன் கூட்டியே குடிநீர் சேகரித்து வைத்துக்கொள்ளுமாறும், அவசர தேவைக்கு லாரி மூலம் குடிநீர் பெற கீழ்கண்ட கைப்பேசி எண்களை தொடர்பு கொண்டு குடிநீர் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

பகுதி பொறியாளர் – 3 – 8144930903

பகுதி பொறியாளர் – 6 – 8144930906

பகுதி பொறியாளர் – 7 – 8144930907

பகுதி பொறியாளர் – 8 – 8144930908

தலைமை அலுவலகம் – 28454040 / 45674567
(புகார் பிரிவு )

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்